(ஆ) சந்திகாரில் நடக்கவிருக்கும் மத்திய-மாநில உறவு மாநாட்டில் தமிழக முதல்வர் கலந்து கொள்வது குறித்தும் டெல்லியில் நடந்த தேசிய அபிவிருத்தி கவுன்சிலில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்தும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, மிக முக்கியமான பிரச்னை-மாண்புமிகு முதலமைச்சரவர்களும் நிதியமைச்சரவர்களும் டெல்லிக்குச் சென்றுவிட்டு இன்றைக்கு வந்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் மத்திய மாநில உறவைப்பற்றி பேசிவிட்டு வந்திருப்பதாகவும், அதுபற்றி சந்திகாரிலே நடைபெறக்கூடிய மாநாட்டிலே கலந்துகொள்ள ஒப்புதல் அளித்திருப்பதாகவும் இன்றைக்குத் தகவல் வந்திருக்கிறது. இன்றைக்கு முக்கியமான பிரச்னையாக இது இருப்பதாலே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் அவைக்கும் சில தகவல்கள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவரவர்களே, என்.டி.சி. கூட்டம் நாடு பூராவும் முக்கியத்துவம் வாய்ந்தது, நம்முடைய தமிழகத்தின் அபிவிருத்தியும் சம்பந்தப்பட்டது. அதிலே, முதலமைச்சரவர்களும் நிதியமைச்சரவர்களும் சில முடிவுகள் எடுத்திருக்கிறார்கள். ஆகவே, நேரடியாக சம்பந்தப்பட்ட முடிவுகளின் இம்பாக்ட் நமக்கு இருக்கிறது. ஆகவே, அது சம்பந்தமாக ஒரு அறிக்கை இந்த ஹவுசிலே வைக்கவேண்டும். பார்லிமெண்டிலே இதுபற்றி பிரதமர் ஒரு அறிக்கை வைத்திருக்கிறார். அந்த ஹவுசிலே அவர் வைத்திருக்கிறார், சப்மிட் பண்ணினார். ஆகவே, இங்கே, முதலமைச்சரோ, நிதியமைச்சரோ, அவர்களுக்குள்ளே யாராவது ஒருவர் ஒரு ஸ்டேட்மென்ட்—இதுபற்றி கொடுப்பது—நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

(பதில் இல்லை.)

2. ஒழுங்குப்பிரச்னைகள்.

(ஆ) பேரவையில் ஒரு மானியக் கோரிக்கைமீது விவாதம் நடக்காதபோது விவாதம் நடந்ததாக ஒரு நாளேடு செய்தி வெளியிட்டது குறித்து எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்னையின்மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் தேதியன்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னை என்று கீழ்க்கண்ட பொருள் பற்றிக் குறிப்பிட்டார்:—

''1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் தேதியிட்ட 'மக்கள் குரல்' நாளிதழில், 'தி.மு.க. ஆட்சியில் கோவில் ஊழல்கள்—சட்டசபையில் எம்.ஜி.ஆர். அறிக்கை' என்ற தலைப்பின்கீழ் வெளியிடப்பட்ட செய்தி குறித்து.

அவையில் இந்து அறநிலையச் சட்ட நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாத நிலையில், அம்மானியக் கோரிக்கைக்காகக் கொடுக்கப்பட்ட குறிப்புரையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் படித்தது போலவே அப்பத்திரிக்கை வெளியிட்டிருப்பது வேண்டுமென்றே செய்யப்பட்டதென்றும், எனவே இதில் அவை உரிமை மீறப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

அவை உரிமை மீறல் குறித்த பிரச்னையை எழுத்து மூலமாகக் கொடுத்தால் அதைக் கவனித்துத் தக்க நடவடிக்கை எடுப்பதாகப் பேரவைத் தலைவர் அறிவித்தார்.

அந்த அறிவிப்பை ஒட்டி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சுப்பு மற்றும் திரு. துரைமுருகன் ஆகியோர் அவை உரிமை மீறல் குறித்த பிரச்னைக்கான அறிவிப்பைக் கொடுத்துள்ளனர்.

1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கை 17—3—1978 அன்று பேரவையில் எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த மானியக் கோரிக்கை குறித்த குறிப்புரைகள் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் 14—3—1978 அன்றே அனுப்பப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இரண்டு நாட்கள் முன்னதாக இக்குறிப்புரைகள் வழங்கப்பட வேண்டும் என்று பேரவைத் துறை வழக்கமாகப் பின்பற்றிவரும் முறைப்படி அப்படி அனுப்பப்பட்டது. ஆனால் பத்திரிகை நிருபர்களுக்கு மானியக் கோரிக்கை அவையில் எடுத்துக் கொள்ளப்பட அறிவிக்கப்பட்டுள்ள நாளன்று காலை கொடுக்கப்படுகிறது. இதே வழக்கப்படி, இந்த மானியக் கோரிக்கை பற்றிய குறிப்புரைகள் 17—3—1978 அன்று காலை பத்திரிகை நிருபர்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால், 17—3—1978 அன்று காவல் துறை மானியக் கோரிக்கை நிறைவேற்றப்படவே நேரம் ஆகிவிட்டபடியால், அறநிலையத்துறை பற்றிய மானியக் கோரிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை.

ஆனாலும் குறிப்புரைகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், பத்திரிகை நிருபர்களுக்கும் ஏற்கனவே கொடுக்கப்பட்டு விட்டன. இந்த குறிப்புரை தான் 'மக்கள் குரல்' பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. இப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசாத ஒன்றைப் பேசியதாக அப்பத்திரிகை வெளியிட்டுள்ளதாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சுப்பு மற்றும் திரு. துரைமுருகன் இருவரும் குறிப்பிட்டு ஆகவே, இது அவை உரிமை மீறல் என்று கூறியுள்ளனர்.

1978 மார்ச் 21] [பேரவைத் தலைவர்]

சம்பந்தப்பட்ட குறிப்புரை ஏற்கனவே அவையில் வைக்கப் பெற்ற ஏடு என்ற முறையிலும் உறுப்பினர்களுக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பெற்ற விவரங்களைக் கொண்ட ஏடு என்ற முறையிலும் அதைப் பிரசுரம் செய்வது தவருகாது.

மேலும் 17—3—1978 அன்று வெளியான 'மக்கள் குரல்' பத்திரிக்கையில் 'சட்டசபையில் எம்.ஜி.ஆர் அறிக்கை—இன்று சட்ட சபையில் முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். விளக்கினர்' என்றும் '' இந்த ஊழல்களை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த கமிட்டி காட்டிய முறைகேடுகளை முதலமைச்சர் வெளியிட்டார் '' என்றும் பத்தித் தலைப்புகள் போட்டு விட்டு அதன் கீழே செய்திகள் வெளியிடும்போது ' இது தொடர்பான விளக்கக் குறிப்பில் அவர் கூறியதாவது ' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதை அவையில் படித்ததாக எழுதப்பெறவில்லை. ஆனல் இதில் அவைமுன் வைக்கப்பட்ட குறிப்புகளில் உள்ள தகவல்களைத்தான் வெளியிட்டுள்ளார்கள். உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல் இதில் பொது மக்களுக்கு வேண்டுமென்றே தவருக செய்தி கொடுக்கும்படியாக பத்திரிக்கையில் வெளியிடவில்லை.

எந்த ஒரு ஏடும் அவைமுன் வைக்கப்பட்டு விட்டால் அது பொது ஏடாகிவிடுகிறது. அதைப் பிரசுரம் செய்வதில் தவறு எதுவும் இல்லை.

எனவே, இதில் அவை உரிமை மீறல் எதுவும் இல்லை என்று தீர்ப்பு அளிக்கிறேன். இருப்பினும் இச்செய்தியை இன்னமும் சிறிது தெளிவாகப் பத்திரிகையில் வெளியிட்டிருந்தால் இப் பிரச்னை எழுந்திருக்காது என்று கருதுகிறேன்.

*திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தங்களுடைய கவனத்திற்கு ஒரு கருத்தினை கூற விரும்புகிறேன். பத்திரிகையிலே இந்தச் செய்தி வந்ததற்கான விரிவான விளக்கத்தைத் தாங்கள் அளித்திருக்கிறீர்கள். அந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது பத்திரிகையினுடைய தவருக இருக்க முடியாது என்பதையும் நான் நிச்சயமாக நம்புகிறேன். ஏன் என்ருல் அவையிலே வைக்கப்பட்ட ஏடுகள் பொது ஏடுகளாக ஆகிவிடுகின்றன என்று தாங்கள் சொன்னதற்கேற்ப அவர்கள் வெளியிட்டுயிருக்கிருர்கள். ஆனுலும் மானியக் கோரிக்கையை அன்றைக்கு எடுத்துக் கொள்ளப்பட இயலாத சூழ்நிலை இருப்பதை அறிந்துள்ள செய்தித் துறையினர் பத்திரிக்கைகளுக்கு முன்கூட்டி அதை அறிவித்து மான்யக் கோரிக்கை இன்று எடுக்கப்படுவதாக இல்லை, அதை நீங்கள் பத்திரிகையிலே பிரசுரிக்கவேண்டாம் என்று—பத்திரிகைத் தொடர்பு அதிகாரிகள் இருக்கிருர்கள்—

அவர்கள் அந்தப் பணியினைச் செய்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது. அந்த அதிகாரிகள் இனிமேல் இதிலே உரியகவனம் செலுத்த வேண்டும் என்று தாங்கள் அவர்களுக்கு கருத்து அறிவிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆஃப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்கிறேன் வேறு ஒன்றும் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன பிறகு நீங்கள் அமர்ந்து விட்டால் நல்லது. என்னுடைய தீர்ப்புக்குப் பின்னால் விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்வது இல்லை.

திரு. க. சுப்பு : தீர்ப்பின் மேல் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்னையின் மேல் எழுப்பக்கூடாது.

. க சுப்பு ; *.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அவர்கள் பேசியதை நீக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறேன். இந்தப் பிரச்னை மீது எழுப்பக்கூடாது.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ள வரிகொடா இயக்கம் குறித்து எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து.—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்த வேண்டி இம்மாதத்தில் இருந்து வரிகொடா இயக்கம் அறிவித்திருப்பதால் எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை பற்ற விவாதிக்க'' பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கீழக்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். திரு. மு. அம்பிகாபதி, திரு. க.சுப்பு, திரு. துரைமுருகன். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாக விளக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.